புலிப்பாக்கம் ஊராட்சி தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை - திரு.மு.சிவகலைச்செல்வன்

ந.க.எண். 2285 / 2017/ அ1

நாள் - 14.02.2018

பொருள் கட்டிட வரைபட அனுமதி - காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் - புலிப்பாக்கம் ஊராட்சி, காந்தலூர் கிராமம், நில அளவை எண் - 120 / 9D, 120 / 8D, 121/ 1E - ல் 1121.37 ச.மீ மனையிடத்தில் 1606.34 ச.மீ பரப்பில் தரைத்தளம் + இரண்டு தளங்களில் 29 குடியிருப்புகள் கொண்ட கட்டுமானத்திற்கு கட்டுமான வரைபடங்களுக்கு நகர ஊரமைப்பு துறை மூலம் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்பு மூலம் இறுதி ஒப்புதல் வழங்குதல் - சார்ந்து.
கட்டிடம் / சுற்றுச்சுவர் / கிணறு / முதலியன கட்டுவதற்கு அனுமதி வழங்கி உத்தரவிடல்.

காஞ்சிபுரம் மாவட்டம் காட்டாங்குளத்தூர் ஒன்றியம் புலிப்பாக்கம் ஊராட்சி

பார்வை
1) அரசாணை நிலை எண். 255 ஊரக வளர்ச்சி (சி2) துறை நாள் 18.08.1997.
2) அரசாணை நிலை எண் - 71 ஊரக வளர்ச்சி (சி2) துறை நாள் - 16.06.2003
3) அரசாணை நிலை எண் - 295 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (12) துறை நாள் - 17.12.2013
4) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண் - 5858 / 2012 / செம3 நாள் - 20.02.2013
5) இவ்வலுவலக மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ( ZONE - 3 ) அவர்களின் ஆய்வறிக்கை நாள் - 09.02.2018
6) ஊராட்சிமன்ற தீர்மான எண் / நாள் - 61 / 03.01.2018

*********

உத்தரவு

காஞ்சிபுரம் மாவட்டம் , காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் , புலிப்பாக்கம் ஊராட்சி, காந்தலூர் கிராமம், நில அளவை எண் - 120 / 9D, 120 / 8D, 121/ 1E - ல் 1121.37 ச.மீ மனையிடத்தில் 1606.34 ச.மீ பரப்பில் தரைத்தளம் + இரண்டு தளங்களில் 29 குடியிருப்புகள் கொண்ட கட்டுமானத்திற்கு கட்டுமான வரைபடங்களுக்கு நகர ஊரமைப்பு துறை மூலம் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திரு.N.ஸ்ரீதர் த/பெ நாராயணன் என்பவர் புலிப்பாக்கம் ஊராட்சி காந்தலூர் கிராமம் நில அளவை எண் - 120 / 9D, 120 / 8D, 121/ 1E - ல் 1121.37 ச.மீ மனையிடத்தில் 1606.34 ச.மீ பரப்பில் தரைத்தளம் + இரண்டு தளங்களில் 29 குடியிருப்புகள் கொண்ட கட்டுமானத்திற்கு கட்டுமான வரைபடங்களுக்கு கட்டுவதற்கு உள்ளாட்சி அமைப்பு மூலம் இறுதி ஒப்புதல் கவ / தனி அலுவலர் (செமு) எண் - 12 /2017 - 2018 என எண்ணிடப்பட்டு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு அளிக்கப்படுகிறது.

இந்த அனுமதியானது **14/02/2018** நாளது முதல் **13/02/2021** - ம் நாள் வரை மூன்று ஆண்டுக்கு செல்லுபடியாகும். அனுமதி கட்டணம் ரூ.80700/- ( ரூபாய் எண்பதாமிரத்து எழுநூறு மட்டும் ) செலுத்தியமைக்கான பலவகை இரசீது எண் - 792 நாள் - 14.02.2018 மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

Scanned by CamScanner

## நிபந்தனைகள்

1. கட்டிடத்தின் முன் பக்கத்தில் 1 மீட்டருக்கு குறையாமலும், பின் பகுதியில் 1 மீட்டருக்கு குறையாமலும் இருபக்கங்களிலும் 1 மீட்டருக்கு குறையாமலும் இடைவெளி விடப்பட்டிருக்க வேண்டும்.
2. தமிழ்நாடு ஊராட்சியின் 1994ம் ஆண்டு திருத்தப்பட்ட சட்டத்தின்படி சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும விதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லா கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.
3. அரசாங்கத்திற்கு சொந்தமான இடங்களிலோ அல்லது இம்மனுதாரருக்கு சம்பந்தமில்லாத வேறு இடங்களிலே ஆக்கிரமணம் செய்வது கூடாது.
4. கட்டிட வேலைகள் நடக்கும் பொழுதோ அல்லது வேறு எந்த நேரங்களிலோ ஊராட்சியிலிருந்து ஆய்வு செய்ய வரும் அதிகாரிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களை காண்பிக்க வசதியாக வேலை நடக்குமிடங்களில் மேற்படி வரைபடங்களை வைத்திருத்தல் வேண்டும்.
5. இந்த உத்தரவில் அனுமதிக்கப்பட்ட கால வரையறுக்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படாவிடில் அனுமதியை மீண்டும் புதியதாக மனு கொடுத்து அனுமதி பெற வேண்டும்.
6. புறம்போக்கு மற்றும் இதர அரசுக்குச் சொந்தமான இடங்களில் எந்தவித ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது.
7. அனுமதித்த வரைபடத்தில் கூடுதலோ அல்லது மாறுதல் ஏதேனும் செய்து கட்ட வேண்டுமானால் அதற்குரிய திருத்தப்பட்ட வரைபடங்களுடன் தலைவர் / நிர்வாக அதிகாரிக்கு / தனி அலுவலருக்கு விண்ணப்பம் செய்து உத்தரவு பெற்ற பிறகுதான் மாறுதல் கட்டிடம் கட்ட வேண்டும்.
8. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் ( ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் ( அ) கட்டிட வரைபட ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இக்கட்டிடத்திற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி இரத்து செய்யப்படும். எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய ஊராட்சித்துறை பொருத்தமான அமைப்பு அல்ல. மேலும் அதனால் ஏற்படும் எந்த இழப்பிற்கும் ஊராட்சி நிர்வாகம் பொறுப்பாகாது.
9. கட்டிடம் கட்ட உத்திரவு பொய்ப்பதிவுகள் மூலம் பெற்றதாகவோ அல்லது ஏதேனும் கட்டிட விதிகளுக்கு புறம்பாகவோ பெற்றதாயிருந்தால் மேற்படி உத்திரவை ரத்து செய்ய தலைவருக்கு/ தனி அலுவலருக்கு உரிமை உண்டு.
10. புதியதாக கட்டப்படும் கட்டிட இடங்கள் எந்த நேரத்திலும் சுத்தமான பொது சுகாதாரக்கேடு விளைவிக்காத வகையில் வைத்து இருத்தல் அவசியம்
11. மனுதாரர் கட்டிடத்தை கட்டி முடித்த பின்பு இவ்வலுவலகத்திலிருந்து சான்றிதழ் பெற்ற பின்பே குடிபுக வேண்டும்
12. கட்டிடத்திலிருந்து வரும் கழிவு நீரை மனுதாரர் தன் சொந்த இடத்திற்குள்ளேயே நிறுத்தி வைத்து அவைகளை அப்புறப்படுத்தும் வகையில் வடிகால்களும், கழிவு நீர்த் தொட்டிகளும் அமைத்துக் கொள்ள வேண்டும். மனுதாரருக்கு சொந்தமில்லாத பொது இடத்திலோ அல்லது மற்றொருவர் இடத்திலோ கழிவுநீரை விடக்கூடாது.
13. கட்டிடம் தொழிலகங்களுக்காகவோ அல்லது வேறு தொழிலாளர் வேலை செய்ய வேண்டிய இடங்களுக்காகவோ கட்டப்படமிருந்தால் அவைகளுக்கு மாவட்ட சுகாதார அலவலரிடமிருந்து தொழிலகங்களின் ஆய்வாளரிடமிருந்து மற்றும் உறுப்பினர்செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் ஆகியோரிடமிருந்தும் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.
14. அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின்படியே கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்பு இவ்வூராட்சியிலிருந்து சான்றிதழ் பெற்றுக் கொள்ள வேண்டும்.
15. கட்டிட வேலை முடிந்த பின்போ அல்லது குடியேறிய பின்னரோ 15 தினங்களுக்குள் தலைவர் / தனி அலுவலர் அவர்களுக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும்.

தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
புலிப்பாக்கம் ஊராட்சி.

14/02/18 14/4/2018 14/4/4

பெறுநர்
திரு.N.ஸ்ரீதர் த/பெ நாராயணன்
24,மங்கையர்க்கரசி நகர்,
நங்கநல்லூர் , சென்னை - 600 061

Scanned by CamScanner